திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி : தலைவர் அவர்களே, இந்த அபராத வட்டியாக வசூலித்த பணத்தைத் திருப்பிப்பெற அரசு வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அபராதமாக வசூலித்த பணத்தைத் திருப்பித்தர வேண்டும் என்று உறுப்பினர் ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும், அதற்கும் காரணம் இருக்கிறது. அரசு ஆணையைத் தவறாகப் புரிந்துகொண்டு, அந்த திண்டிவனம் வட்டாட்சியர் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து, ரூ. 38,000 வசூல் செய்திருக்கிறார்கள். ஏன் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது என்று அவர் மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. வசூலிக்கப்பட்ட பணம் திருப்பித்தரப்படும் அல்லது அவர்கள் பணம் கொடுக்க வேண்டியிருந்தால்,அதிலே சரி செய்து கொள்ளப்படும்.

முதுகலை வகுப்புகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்க்கான இடங்கள்.

*வினா எண். 809 : திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பல்கலைக் கழகத்தில் முதுகலை (எம்.ஏ.) வகுப்பில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை விழுக்காடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி அரசு ஆணை பிறப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அந்த ஆணை சென்னைப் பல்கலைக் கழகத்தால் மீறப் பெற்றுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணைப்படி, 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் (Scheduled caste and Scheduled tribes) சென்னைப் பல்கலைக் கழக முதுகலை வகுப்புகளில் கல்வி பயில 1978-79-ம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு ஆணையினை சென்னை பல்கலைக்கழகம் மீறவில்லை என்பது தெளிவு.

திரு. ரா. கிருஷ்ணன்: சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இருக்கக்கூடிய தனியார் கல்லூரிகளில் இப்படிப்பட்ட 18 சதவிகித விழுக்காடு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? அப்படி நிரப்பப்படாமல் இருந்தால் அதை மீறுகிற நிர்வாகத்தின் மீது இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது? இதுவரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு ஆணை எண் 695, சமூக நலத் துறை, 7—6—1971-ல் 1971-72 கல்வியாண்டு முதற் கொண்டு அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 விழுக்காடு இடங்களும் பின் தங்கிய மாண வர்களுக்கு 31 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படுதல் வேண்டு மென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையைத் தொடர்ந்து பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தல் பின்பற்றப்படுவது கல்வி நிலையங்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து அளிக்கப்படும் மானியங்களுக்கு ஒரு நிபந்தனையாக அமையும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. சௌந்திரராசன்: அமைச்சர் அவர்கள் 18 சத விகிதம் விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் இடம் ஒதுக்கப்படுகிறது என்று அறிவித் தார்கள். மற்ற பல்கலைக் கழகங்களில் அந்த உத்தரவு கடைபிடிக்கப்படுகிறதா? அதை மீறிய பல்கலைக்கழகம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லையென்றாலும் மற்ற பல்கலைக் கழகங்களும் இதைப் பின்தொடர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கருத்து. அப்படிப் பின்பற்றாத பல்கலைக் கழகங்கள் மீது மானியங்களைத் தரும்போது அதன் அடிப்படையில் அதைப் பயன்படுத்தி தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

நெல்லை மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம்.

வினா எண் 810: திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

(இ) விளையாட்டுப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியை இத் திட்டத்திற்குச் செலவிட அரசு முன் வந்துள்ளதா?